1981 ஏப்ரல் 14]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இராமநாதபுரம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த தாகச் சொன்னார்கள். அவர்களே இங்கே பேசுகின்றபோது, அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்களிடமும், அதிகாரி களிடமும் தொடர்பு கொண்டதாகச் சொன்னார்கள். காலை யிலே வானொலியிலும் இந்தச் செய்தி ஒலிபரப்பப்பட்டது. ஆகவே, அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பை அளித்திருக்கிறது; அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறபோது, அதை இன்றேஎடுத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையிலே எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் பேசியாக வேண்டும். நாளை எடுத்துக் கொள்ளலாம்.

5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சைதாப்பேட்டையில் அரசு ஊழியரின் மனைவி கொலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "சென்னை சைதாப்பேட்டையில் அரசு ஊழியர் ஒருவரின் மனைவி 30-3-1981 அன்று பட்டப் பகலில் அடித்துக் கொலை செய்யப்பட்டு, நகைகள் திருடப்பட்டுள்ளதால், அப்பகுதியில் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று கேட்டு, திருவாளர்கள் ஆர். கருப்பையா, டி. கே. நல்லப்பன், எம். அப்பாத்துரை, ஆர். கிருஷ்ணன், என். வரதராசன், என். பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள் கிறேன். திரு. ஆர். கருப்பையா.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில், சைதாப்பேட்டையில் அரசு ஊழியருடைய மனைவி, அவர் தன்னுடைய வீட்டிலே இருக்கின்ற நேரத்திலே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். பொதுவாக அதனுடைய விவரங்களுக்குள் போகவேண்டிய அவசியம் அதிக மில்லை என்று கருதுகிறேன். இந்தப் படுகொலையைப்பற்றி அனைவரும் அறிவார்கள். அந்த அரசு ஊழியர் தன்னுடைய அலுவலகம் சென்றிருக்கின்ற நேரத்திலே, சற்றும் எதிர்பாராத நிலையில் அந்தப் படுகொலை நடந்திருக்கிறது. இது இந்த நகரத்திலே நடைபெற்றிருக்கிற முதல் கொலை என்றுகூடச் சொல்ல முடியாது, சென்னை நகரத்திலே தொடர்ச்சியாக இந்த மாதிரி கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவர்கள் அலுவலகங்களுக்குச் செல்லக் கூடிய நேரத்தில் இதுபோன்று ஏற்பட்டு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலையில்

நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறுவது அரசு ஊழியர்கள் மத்தியிலே ஒரு பதட்ட நிலைமை ஏற்படுத்தி இருக்கிறது. பொதுவாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் இந்தமாதிரி நிலைமை இருக்கிறது.

சில தினங்களுக்குப் முன்பு திருச்சியிலே பி. எச். இ. எல்.-ல் பணிபுரியக்கூடிய யோகநாதன் என்ற தொழிலாளர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். பெரிய நகரங்களில் அலுவலகங்களுக்கு வீட்டார் செல்லக்கூடிய நேரத்தில் அவர்களுடைய குடும்பங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியிருக்கிறது. சரியான பாதுகாப்பு ஏற்பாடுகளை உத்தரவாதத்துடன் செய்யவேண்டியது அவசியம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். இம்மாதிரியான கொலைகள் நடைபெறாமல் தடுக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நகர்ப்புறங்களில் சமூக விரோத சக்திகள் பெருகி வரக்கூடிய ஒரு நிலையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகரில் புறநகர்ப் பகுதிகளில் இப்படிப்பட்ட சமூக விரோத சக்திகள், கணவன்மார் வீட்டில் இல்லாத நேரத்தில், அலுவலகத்திற்குச் சென்றிருக்கும் போது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதேபோல்தான் சைதாப்பேட்டையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. துபாய் செல்லும் நபர் ஒருவர் பணம் தேவையென்ற நிலையில் இந்தக் கொலையைச் செய்திருப்பதாகத் தெரிகிறது. தொடர்ச்சியாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்து வருவதால், சரியான போலீஸ் பாதுகாப்பை தகுந்த அடிப்படையில் ஏற்பாடு செய்ய வேண்டியது மிக அவசியம். எந்த ஒரு நபருமே பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக முழுமையாக விவாதிக்கப் பேரவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. வேல்முருகன் என்பவர் நெடுஞ்சாலைத்துறையில் வரைபடம் எழுதுபவராகப் பணிபுரிபவர். இவர் சென்னை சைதாப்பேட்டை மசூதித் தெருவில் 36-ம் எண் வீட்டு மாடியில் தன் மனைவி காந்தா (வயது 35)-வுடனும், 3 மகன்களுடனும் அந்த வீட்டில் சென்ற ஒரு மாத காலமாகக் குடியிருந்து வருகிறார். 30-3-81 அன்று பிற்பகல் உணவிற்காக திரு. வேல்முருகன் தனது இல்லத்திற்குச் சென்ற பொழுது, அங்கு தன்னுடைய பழைய நண்பன் நடராஜ பிள்ளையின் மகன் தர்மராஜ் பாண்டியன் (வயது சுமார் 30) வந்திருப்பதைக் கண்டார். இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பின் திருமதி காந்தா இருவருக்கும் மதிய உணவு அளித்தார். பிறகு திரு. வேல்முருகன் தன்னுடைய அலுவலகத்திற்குச் சென்றுவிட்டார். தர்மராஜ் பாண்டியன் நடு அறையில் ஓய்வு எடுப்பதாகக் கூறிப் படுத்துக் கொண்டார். சிறிது நேரம் ழித்துத்

திருமதி காந்தா சாப்பிட்டுவிட்டு தன் வேலைகளை முடித்துக் கொண்டு அதே அறையில் வந்து கீழே படுத்துக் கொண்டார். இவர்களைத் தவிர அப்பொழுது வீட்டிலிருந்த ஒரே நபரான திருமதி காந்தாவின் மகன் 11 வயதான அருள் ஜோதியை தர்மராஜ் பாண்டியன், பக்கத்திலிருக்கும் கடைக்குச் சென்று வயிற்று வலி மாத்திரைகள் இரண்டு, வாங்கி வரும்படி அனுப்பி இருக்கிறார். அந்தப் பையன் வெளியே சென்றதும், ஏற்கனவே பேப்பருக்குள் சுருட்டி வைத்திருக்கும் சிறு கடப்பாறை ஒன்றை எடுத்து உறங்கிக் கொண்டிருந்த காந்தாவின் தலையில் ஓங்கி பல முறை அடித்து அவரைக் கொன்றுவிட்டு, அவர் கழுத்திலிருந்த 13 பவுன் கோதுமை தங்க சங்கிலி ஒன்றையும், இரு கம்மல்களையும் கழற்றிச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. வீட்டிற்குத் திரும்பிய அருள்ஜோதி தன் தாய் ரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்து அவலக் குரல் எழுப்ப அதன் பிறகு தகவல் கிடைத்து போலீசார் அங்கு சென்று புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் திரு. தர்மராஜ் பாண்டியன், வேல்முருகனின் குடும்பநண்பர் என்பதும், அடிக்கடி வேல்முருகனைப் பார்க்க வந்து போகும் வழக்கம் உண்டு என்றும் தெரிய வந்துள்ளன. இவர் மன்னார்குடியில் வேளாண்மைத் துறையில் 'போரிங் மெக்கானிக் காகப்' பணியாற்றி வந்தார் என்றும் தெரிய வந்துள்ளது

[முற்பகல் 10.10]

இப்போது அவர் தலைமறைவாக உள்ளார். அவரை விரைந்து பிடிப்பதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே இந்தச் சம்பவம் காரணமாக இப்போது ஏதும் பதட்ட நிலைமை இல்லை. விரைவாக குற்றவாளியைப் பிடிப்பதற்கான முயற்சிகளைக் காவல் துறையினர் தீவிரமாக மேற்கொண்டு உள்ளனர். எனவே பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

6. கவன ஈர்ப்புகள்.

அ. தஞ்சை சோதனைச் சாவடிகளில் பணியாற்றும் ஊழியர்கள் சம்பளம்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் சோதனைச் சாவடிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சென்ற 3 மாத காலமாக ஊதியம்